
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1288

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# 'மைனாரிட்டி' தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

76

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்



# நாடாளுமன்றத்தில் ஒலிக்கும் குரல்!

தொகுதி மறுவரையறை விவகாரத்தில், தி.மு.க.வின் நிலைப்பாடு என்ன என்று கேள்வி கேட்பது போல, கழகத்தின்மீது ஓர் எதிர்மறைக் கருத்தாக்கத்தைக் கட்டமைக்கச் சிலர் முயன்றிருக்கிறார்கள். சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு கொண்டுவரப்பட்ட தொகுதி மறுவரையறை மசோதாவில் இருந்த தென்மாநிலங்களை வஞ்சிக்கும் பேராபத்தை, முதன்முதலில் விளக்கிச் சொன்ன இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம்தான். 'அனைத்துக் கட்சிக் கூட்டம்', 'தீர்மானம்', 'தென் மாநில முதலமைச்சர்கள் மாநாடு', 'மசோதா நகல் எரிப்பு - கருப்புக்கொடி போராட்டம்' என்று அடுத்தடுத்த அதிரடிகளால் ஒன்றிய பா.ஜ.க. அரசை ஸ்தம்பிக்கவைத்து, நாடாளுமன்றத்தில் மசோதாவைத் தோற்கடித்த இயக்கம், தி.மு.கழகம்.

அந்த மசோதா மீண்டும் இன்னும் வரவில்லை; எப்போது தாக்கல் செய்யப்படும் என்று தெரியவில்லை; அதில் என்ன இருக்கப் போகிறது என்றே தெரியாது. ஆனால், இப்போதே தி.மு.க. என்ன செய்யப்போகிறது என்கிறார்கள். அவர்களுக்கு, மசோதா வரட்டும் பார்த்துவிட்டு, அதில் என்ன இருக்கிறது என்பதைப் பொறுத்து தலைவரின் நிலைப்பாடு அமையும் என்று பதில் சொல்லிவிட்டது கழகம். அந்தப் பதிலோடு சேர்த்து, எதிராளிகளுக்கு நாம் வைக்கவேண்டிய ஒரு கேள்வி, 'வெளிநாட்டு நிதி உதவிச் (ஒழுங்கு முறை) சட்டத் திருத்த மசோதா'.

இஸ்லாமியர்களுக்கு 'வக்பு வாரிய திருத்த மசோதா' போல, கிறிஸ்தவர்களுக்கு, 'வெளிநாட்டு நிதி உதவிச் (ஒழுங்குமுறை) சட்ட மசோதா என்ற பேராபத்தான ஆயுதத்தை எடுத்து வைத்திருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. வக்ஃபு வாரிய மசோதாவுக்கு எதிராக, எத்தகைய போர்க்குணத்தோடு தி.மு.கழகம் போராடியதோ, அதே போர்க் குணத்தோடு வெளிநாட்டு நிதி உதவி (ஒழுங்குமுறை) சட்ட மசோதாவுக்கு எதிராகவும் போராடிக்கொண்டிருக்கிறது.

வெளிநாட்டுப் பங்களிப்பு ஒழுங்குமுறைச் சட்டம் (FCRA) என்பது, இந்தியாவில் உள்ள 'சங்கங்கள்', 'அறக்கட்டளைகள்', 'தொண்டு நிறுவனங்கள்', 'கல்வி மற்றும் மத அமைப்புகள்,' வெளிநாடுகளில் இருந்து நன்கொடை அல்லது பிற நிதி பெறுவதை ஒழுங்குபடுத்தும் சட்டம். வெளிநாட்டு நிதி பெற விரும்பும் அமைப்பு, பொதுவாக FCRA பதிவு அல்லது முன் அனுமதி பெற வேண்டும். தனித்த வங்கிக் கணக்கு மூலம் நிதியைப் பெற வேண்டும். அந்த நிதியை அனுமதிக்கப்பட்ட சமூக, கல்வி, மருத்துவ, மத அல்லது பிற நோக்கங்களுக்கே பயன்படுத்த வேண்டும். கணக்குகள் மற்றும் பயன்பாட்டு அறிக்கைகளை, ஒன்றிய அரசிடம் தாக்கல் செய்ய வேண்டும்.

ஆனால், தற்போது ஒன்றிய அரசு முன்மொழிந்திருக்கும் சில திருத்தங்களால், இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி, வெளிநாட்டில் இருந்து நிதிபெற்று, இந்தியாவில் கல்விச்சேவை புரிந்துவரும் கிறிஸ்தவ நிறுவனங்கள் கடுமையாகப் பாதிக்கப்படக்கூடியதாக உள்ளன. கடந்த 2 நூற்றாண்டுகளாக இந்தியாவில் கல்விச் சேவை புரிந்துவரும் கிறிஸ்தவ நிறுவனங்களின் சேவையை முடக்கும் வகையில் இந்தத் திருத்தங்கள் அமைந்துள்ளன.

FCRA பதிவு தொடர்பான நடவடிக்கைகளுக்குப் பிறகு, அமைப்பின் வெளிநாட்டு நிதி மற்றும் அதில் உருவாக்கப்பட்ட சொத்துகள் ஒரு நியமிக்கப்பட்ட அதிகாரியிடம் தற்காலிகமாகச் செல்லும் என்கிறது ஒன்றிய அரசின் திருத்தம். மேலும், FCRA பதிவு ரத்து செய்யப்பட்டாலோ, அமைப்பு தனது FCRA பதிவைத் தானாக ஒப்படைத்தாலோ, பதிவு காலாவதியானாலோ, புதுப்பிப்பு மறுக்கப் பட்டாலோ அல்லது புதுப்பிக்கப்படாமல் போனாலோ, வெளிநாட்டு நிதியும் வெளிநாட்டு நிதியில் உருவாக்கப்பட்ட சொத்துகளும் முதலில் *provisionally vest* எனப்படும் தற்காலிக ஒப்படைப்பு நிலைக்குச் செல்லும். குறிப்பிட்ட காலத்திற்குள் மீண்டும் பதிவு பெறப்படாவிட்டால் அல்லது புதுப்பிக்கப்படா விட்டால், சொத்துகளை நிரந்தரமாக அரசின் வசம் இழக்க நேரிடும்.

அதேபோல, நியமிக்கப்பட்ட அதிகாரி தேவையான சூழலில், அமைப்பின் சொத்துகளைப் பாதுகாக்கலாம், அதன் நிர்வாகத்தை ஏற்கலாம், சொத்துகளை அரசுத் துறைகளுக்கு மாற்றலாம், சில சூழ்நிலைகளில் சொத்துகளை விற்று, கிடைக்கும் தொகையை இந்தியாவின் ஒருங்கிணைந்த நிதியில் சேர்க்கலாம். பதிவு புதுப்பிக்கப்படாத அமைப்புகளின் கடந்த கால வெளிநாட்டு நிதியில் உருவாக்கப்பட்ட சொத்துகளும் இந்தப் புதிய நடைமுறையின் கீழ் வரக்கூடும்.

பல கிறிஸ்தவ அமைப்புகள் பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், முதியோர் இல்லங்கள், ஆதரவற்ற இல்லங்கள் மற்றும் சமூகநல மையங்களை நடத்துகின்றன. பதிவு ரத்துசெய்யப்பட்டது அல்லது புதுப்பிக்கப்பட வில்லை என்பதற்காக, அந்த அமைப்புகளின் கட்டடங்களையும் சேர்த்து இழக்க நேரிடும் என்பது அவற்றை முடக்குவதற்கான தந்திரச் செயலே. அரசு மேற்கொள்ள வேண்டிய ஆக்கபூர்வ நடவடிக்கை அல்ல இது.

### கழகத்தின் எதிர்ப்பு

தமிழ்நாட்டில் இந்த மசோதாவுக்கு எதிரான, தெளிவான எதிர்ப்பு அரசியல், தி.மு.க.ழகத்திடம் இருந்துதான் பதிவாகியுள்ளது. இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் ஈஸ்டர் தினத்தன்று, ஒன்றிய அரசு இம்மசோதாவை அறிமுகப் படுத்தியபோது, தொடக்க நிலையிலே தி.மு.கழக எம்.பி. வில்சன் மிகக் கடுமையாக எதிர்த்தார்.

"2014-ஆம் ஆண்டு முதல், பா.ஜ.க. தலைமையிலான அரசு, கிறிஸ்தவ சமயப் பணிகள் மற்றும் தேவாலயங்களுக்கான நிதி உதவியைக் கணிசமாகக் குறைத்துள்ளது. 2020-இல் 2,500 கிறிஸ்தவ நிறுவனங்கள் உட்பட 20,000-க்கும் மேற்பட்ட தொண்டு நிறுவனங்களின் உரிமங்களை ரத்துசெய்துள்ளது. இதற்கு முன்னர் முஸ்லிம்களின் வக்ஃப் சொத்துகளைக் குறிவைத்துள்ளது. இந்த மசோதா, கிறிஸ்தவ மதப் பரப்புரையாளர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தேவாலயங்களைக் குறிவைப்பதையே முழு நோக்கமாகக் கொண்டுள்ளது. சொத்துகளைப் பின்னோக்கிப் பறிமுதல் செய்வது கொடுமையானது.

'பள்ளிகள்', 'கல்லூரிகள்', 'மருத்துவமனைகள்' மற்றும் 'ஆதரவற்றோர் இல்லங்கள்' போன்ற முக்கிய சொத்துகளை, உடனடியாகப் பறிமுதல் செய்ய இந்த மசோதா அனுமதிப்பதன் மூலம், ஏழைகளுக்கு அத்தியாவசிய சேவைகளை மறுக்கிறது" என்றும் கண்டித்தார். மக்களவையிலும் இந்த மசோதாவை தி.மு.கழகம் எதிர்த்தது.

'ஏற்கெனவே வக்ஃபு வாரிய சட்டத் திருத்தம் வாயிலாக இஸ்லாமியச் சொத்துகளை கபளீகரம் செய்ய முயன்றதையடுத்து, தற்போது மற்ற மத சிறுபான்மையின அமைப்புகள், வெளிநாடுகளில் இருந்து பெறும் நிதியை முடக்கும் முயற்சியில் மத்திய பா.ஜ.க. அரசு இறங்கியுள்ளது' என அப்போதே கண்டன அறிக்கை வெளியிட்டார், கழகத் தலைவர். அப்போது கேரள தேர்தலை மனதில் வைத்து, மசோதாவை தற்காலிகமாகத் திரும்பப் பெற்ற ஒன்றிய அரசு, மீண்டும் தாக்கல் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு இருக்கிறது.

இந்நிலையில், ஆகஸ்ட் 6-இல் உள்துறை அமைச்சர் அமித்ஷாவை வில்சன் தலைமையிலான குழு சந்தித்து, மசோதாவைத் தாக்கல் செய்யக்கூடாது என வலியுறுத்தியது. இந்த மசோதாவை எதிர்த்து, தி.மு.கழகம் மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு கிறிஸ்தவ சமயப் பெரியோர்கள், ஆகஸ்ட் 8-ஆம் தேதி கழகத் தலைவரை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர். 'சிறுபான்மையினர் பாதுகாப்பு அரண்' என்பதை இவ்விவகாரத்திலும் நிரூபித்திருக்கிறது, தி.மு.கழகம்.

> "'சிறுபான்மையினர் பாதுகாப்பு அரண்' என்பதை இவ்விவகாரத்திலும் நிரூபித்திருக்கிறது, தி.மு.கழகம்."

...நீளும்

## வளர்ச்சியை முடக்கும் த.வெ.க!

தேர்தல் வெற்றிக்கான உத்தியாக, தி.மு.க. சார்பு கிறிஸ்தவ வாக்குகளையும், மீனவ சமூகத்தினரின் வாக்குகளைக் கவர்வதற்காகவும் விஜய்... 'ஜோசப்' விஜய் ஆனார்! சர்ச்சில் மண்டியிட்டு நடந்தார். ஆட்சியைப் பிடித்ததும், தனது அமைச்சரவையில் கிறிஸ்தவர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதுபோல் காட்டிக்கொண்டார். சபாநாயகர் தனது உரையில், பைபிள் வசனங்களைப் பேசினார். நிதியமைச்சர் தனது பட்ஜெட் உரையோடு ஜெபமாலையையும் எடுத்துவந்து, அதை ரீல்ஸ் காட்சியாக்கினார். ஆர்.எஸ்.எஸ். உடனான மறைமுக ஆலோசனையின்பேரில், இப்படி செயல்படுகிறார்களா என்பது ஆய்வுக்குரியது எனச் சந்தேகம் எழுப்பியுள்ளார், பத்திரிகையாளர் தெ.சு.கவுதமன். அவரது முகநூல் பதிவிலிருந்து...

"இந்தச் செயல்களின் பின்விளைவுகள் குறித்த சிந்தனையே இல்லாமல், த.வெ.க. இப்படிச் செயல்படுகிறதா? அல்லது ஆர்.எஸ்.எஸ். தமிழ்நாட்டில் 'வெறுப்பரசியல்' பிரச்சாரம் செய்ய வழி வகுக்கிறார்களா? இன்னும் கொஞ்ச காலத்தில் இதன் பின்விளைவுகள், சிறுபான்மையினருக்கு அச்சுறுத்தலாக மாறக்கூடும்.

கிறிஸ்தவ மிஷனரியின் ஆட்சிதான் தமிழ்நாட்டில் நடக்கிறது என்ற பிரச்சாரத்தைத் தீவிரப்படுத்துவார்கள். அதற்கெதிராக, வட மாநிலங்களில் இந்துத்துவா என்ன மாதிரி ஊர்வலங்களை... விழாக்களை நடத்துகிறதோ அனைத்தையும் நடத்துவார்கள்... அதன்பின், தமிழ்நாட்டின் பொது அமைதி குலையும். மக்களிடையே மனப்பிளவு அதிகரிக்கும். இப்படி ஆர்.எஸ்.எஸ். அஜெண்டாவுக்கு த.வெ.க. பாதையமைத்துக் கொடுக்கிறது.

தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை, முதலில் பாட வேண்டுமென்று தீர்மானம் போட்டார்கள். அதன்பின்னர், ஒய்.எம்.சி.ஏ. கல்லூரியில் கிறிஸ்தவப் பாடலை முதலாவதாகப் பாடியிருக்கின்றனர். த.வெ.க. செய்துவரும் மத அரசியலால் கிறிஸ்தவ மக்களின் நிம்மதிதான் கெடக்கூடும். இத்தனை காலமாகத் தமிழ்நாட்டில் இருந்த நிம்மதியான சூழல் சிதையச் சிதைய, தமிழ்நாட்டின் அனைத்து வளர்ச்சியும் முடக்கப்படும். இன்னும் நிறைய அனுபவிக்க வேண்டியிருக்கும்" என்று எச்சரிக்கை செய்கிறார்.

## ஃப்ளாஷ்பேக்


கே.வி.ராஜ்குமார்



### உண்மையை உலகறியட்டும்!

2015-ஆம் ஆண்டில், அக்டோபர் 31-ஆம் தேதி, திருவண்ணாமலை மாவட்டம் போளூர் தொகுதியில், இன்றைய கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்கள், 'முடியட்டும்! விடியட்டும்!', 'நமக்கு நாமே - விடியல் மீட்புப் பயணம்' என்கிற பரப்புரையின்போது, கரும்பு விவசாயிகள் சந்திப்பு நடைபெற்றது. அதற்கான ஏற்பாட்டினை, முன்னாள் அமைச்சர் அண்ணன் எ.வ.வேலு மற்றும் அண்ணன் செல்வகணபதி எம்.பி., ஆகியோரின் ஆலோசனையின் பேரில் நான் மேற்கொண்டேன். இந்த நிகழ்ச்சியில் கரும்பு விவசாயிகள் மற்றும் சங்கத் தலைவர்கள் பலர் கலந்துகொண்டனர். நிகழ்ச்சி நடைபெறும் இடத்தின் அருகில், ஏர் மாடு பூட்டி உழவு செய்துகொண்டிருப்பதைப் பார்த்து, அந்த விவசாயியிடம் அனுமதி பெற்று, தலைவர் அவர்கள், அந்த நாட்டு மரக்கலப்பை கொண்ட ஏரை ஓட்டினார்கள். அப்போது, ஷூவைக் கழற்றிவிட்டுதான் ஏர் ஓட்டினார். 10.8.2026 அன்று, சட்டப்பேரவையில் வேளாண் பட்ஜெட் மீதான விவாதத்தில், அமைச்சர் ஒருவர் தளபதி அவர்களைக் குறிப்பிட்டு, உண்மைக்குப் புறம்பாகப் பேசியபோது, இந்தப்படம் மூலம் உண்மை என்ன என்பதை எல்லோருக்கும் சொல்ல வேண்டும் என்று தோன்றியது.

**– கே.வி.ராஜ்குமார், கழகத் தலைமைச் செயற்குழு உறுப்பினர், தலைவர், தென் இந்திய கரும்பு விவசாயிகள் சங்கம், போளூர், தமிழ்நாடு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### குரல்கொடுக்கும் கழகம்!

1962-ஆம் ஆண்டு மார்ச் 4-ஆம் தேதி, தேர்தலில் வெற்றிபெற்ற கழக வேட்பாளர்களுக்கு, சென்னை கடற்கரையில் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில், பேரறிஞர் அண்ணா அவர்கள் உரையாற்றுகையில், "தி.மு.கழகத்தினர் பொறுப்புள்ள எதிர்க்கட்சியினராகப் பணியாற்றுவார்கள்; நீர்ப்பாசனத் திட்டங்களை வற்புறுத்துவார்கள்; விவசாயப் பிரச்சினையை விவாதிப்பார்கள்; மக்களுக்குத் தேவையான எல்லாப் பிரச்சினைகளையும் எடுத்துப் பேசுவார்கள். நாட்டுப் பிரச்சினை மட்டுமல்ல - வீட்டுப் பிரச்சினையையும் பேசத் தவற மாட்டார்கள்" என்று விளக்கினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900